ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| **திகதி** | 2017 ஒகத்து 04 |

**இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு, பூட்டான் இராச்சியத்தின் நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் சீனாவின் பணம் தூயதாக்கலைத் தடுப்பதற்கான கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு நிலையம் போன்றவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது**





இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்கெதிரான புலனாய்வுகளையும் வழங்குகள் தொடர்வதற்கான நடவடிக்கைகளையும் வசதிப்படுத்தி நிதியியல் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு 2017 யூலை 17 - 21 காலப்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தின் 20 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பூட்டான் இராச்சியத்தின் நிதியியல் உளவறிதல் பிரிவு மற்றும் சீனாவின் பணம் தூயதாக்கலைத் தடுப்பதற்கான கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு நிலையம் போன்றவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கிறது.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கைகள் 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கைச்சாத்திடப்பட்டுள்ளது. சீனா 2001இல் பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தின் உறுப்பினராகியதுடன் நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவில் 2007இல் முழுமையான உறுப்பினராக இணைந்தது. நிதியியல் உளவறிதல் பிரிவு - பூட்டான் றோயல் நாணய அதிகாரத்திற்குள் 2010 ஒத்தோபரில் தாபிக்கப்பட்டதுடன் 2011இல் பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தில் அதன் உறுப்புரிமையை பெற்றது.

பன்னாட்டு ரீதியான அடிக்கடி தொடர்புறுத்தப்படுகின்றதும், உலகளாவிய குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்து வெளிப்படுகின்றதுமாகிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கும் நோக்குடன் உலகம் முழுவதிலுள்ள நிதியியல் உளவறிதல் பிரிவுகள் தகவல்களை பரிமாற்றிக் கொள்வதனூ டாக ஒருவர் மற்றொருவருடன் ஒத்துழைப்பிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பின்பற்றுகின்றது. இந்த நோக்கின் அடிப்படையில், ஒவ்வொரு நாடுகளும் பின்பற்றப்பட வேண்டிய சட்ட ரீதியான கட்டமைப்பொன்றினை வழங்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களினூடாக நிதியியல் உளவறிதல் அதிகாரங்களுக்கிடையிலான கூடுதலான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கின்றது. இது உலக அளவிலான நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் அமைப்பான எக்மொன்ட் குழுவினால் அறிமுப்படுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொழுத்திட்டதன் மூலம் இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவினால் கையொழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 35 ஆக அதிகரித்திருக்கின்றது.